**வத்தேகம நகர சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கை 2018 ஜூலை 02 திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, வத்தேகம நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 2 வாகனங்களின் பெறுமதி ரூபா 2,724,608 இனால் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமான மக்கள் வங்கி நிலையான வைப்பில் மீளாய்வாண்டிற்கான வட்டி ரூபா 153,740 குறைத்தும் மற்றும் பெற வேண்டிய வட்டி ரூபா 72,285 கூடுதலாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) கந்துரட்ட அபிவிருத்தி வங்கியின் நிலையான வைப்புக்கான வட்டி ரூபா 99,587 குறைத்தும் மற்றும் பெற வேண்டிய வட்டி ரூபா 167,379 கூடுதலாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு நிலையான சொத்துக்களின் கிரயம் ரூபா 136,496,486 ஆன போதும், ரூபா 135,076,383 ஆக கணக்கிடப்பட்டமையினால் நிலையான சொத்து ரூபா 1,420,103 குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் மிகை ரூபா 3,767,622 ஆன போதும், பேரேட்டின் மிகையும் பற்றாக்குறையும் கணக்கில் ரூபா 5.010,241 ஆக காட்டப்பட்டது.

(ஊ) முன்னைய ஆண்டிற்கான கட்டணப் பட்டியல் சமர்ப்பிக்கப்படாத ரூபா 38,330 ஆன ஒர் பெறுமதி கடன் கொடுத்தோராக கணக்கிடப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நுவரதென்ன குடி நீர் உத்தேச திட்டத்தில் கடன்பட்டோர் மீதி ரூபா 18,000 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 6,633,852 ஆன 3 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் மற்றும் அவைகளுக்கான துணைப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுக்கிடையில் ரூபா 263,892 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதி திகதியில் பெற வேண்டிய 4 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 7,508,207 ஆனதுடன், 1-5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,538,517 மற்றும் 5 ஆண்டு காலத்தையும் விஞ்சிய ரூபா 1,969,690 ஆன மீதியொன்று அதில் உள்ளடங்கப்பட்டிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

-----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 1,467,274 ஆன 3 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

**1.3.5 இணங்காமை**

-------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை |
|---|---|---|---|
| | | ---------------------------------------------------------------- | -------------------- |
| (அ) | | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | ஆண்டுக்கு ஒருமுறை வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட வேண்டிய போதும், சபைக்கு சொந்தமான 2 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | | | |
| (ஆ) | | மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 ஆம் சுற்றறிக்கையின். | |
| | | ---------------------------------------------------------------- | |
| | (i) | 04 (1) பிரிவு | மாதாந்த வாடகை உரிய திகதிக்கு செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் 5 சதவீத உயர்ந்த பட்சத்திற்கு அமைய குத்தகை பணம் அறவிடுவதற்கு நிபந்தனைகள் உடன்படிக்கைக்கு உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், மாதாந்த வாடகை தாமதமான சந்தர்ப்பங்களில் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | | | |
| | (ii) | 13 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான கட்டிடங்களை குத்தகைக்கு வழங்கும் போது அரச நிறுவனங்களுக்கு விஷேட அனுசரணை வழங்க கூடாததுடன், தொழில் பயிற்சி அதிகார சபையின் பயிற்சி மத்திய நிலையம் ஒன்றை நடாத்துவதற்காக 2010 ஆண்டு முதல் சபைக்கு சொந்தமான பழைய நகர சபை கட்டிடத்தின் மேல் மாடியை பயிற்சி நடவடிக்கைகளுக்காக இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. |
| | | | |

### 1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

குப்பை பாத்திரங்கள் கருத்திட்டத்திற்காக 2013 ஆண்டில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 278,350 யை பயன்படுத்தி அனுமதியின்றி சுற்றாடல் நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 12,642,099 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,490,412 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் இடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 15,316,050 | 15,927,065 | 11,814,985 | 4,112,080 | 20,055,500 | 16,647,920 | 13,354,135 | 3,293,785 |
| வாடகை | 4,573,700 | 4,142,965 | 4,266,570 | (123,605) | 4,844,100 | 4,890,065 | 4,886,250 | 3,815 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 700,000 | 766,220 | 765,220 | 1,000 | 760,000 | 785,450 | 782,450 | 3,000 |
| ஏனைய வருமானம் | 1,988,500 | 2,341,480 | 2,341,480 | - | 1,096,000 | 4,809,450 | 4,809,450 | - |
| | 22,578,250 | 23,177,730 | 19,188,255 | 3,989,475 | 26,755,600 | 27,132,885 | 23,832,285 | 3,300,600 |
| | ========== | ========== | ========== | ========== | ========= | ========= | ======== | ======== |

(அ) சபை அதிகார பிரதேசத்தில் முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டு வருமானத்தை வளர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகார பிரதேசத்தில் தனியார் நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் கடைகளிலிருந்து குப்பை வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வீதவரி மற்றும் குத்தகை

2017 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை வீத வரி மீதி ரூபா 3,158,364 ஆனதுடன், மீளாய்வாண்டு பில் இடல் ரூபா 5,740,053 ஆனது. இந்த மீதிகளின் மீளாய்வாண்டில் அறவீட்டு சதவீதம் முறையே 42 சதவீதம் மற்றும் 67 சதவீதமானதால் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3,474,595 ஆன நிலுவை மீதி காணப்பட்டதுடன், அம் மீதியினுள் ஒராண்டை விஞ்சிய ரூபா 1,831,791 ஆன மிதி ஒன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

2.2.4 **அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2014 ஆகஸ்ட் 02 திகதிய மற்றும் இலக்கம் 2014/5 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை பிரகாரம் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக முறையான ஆய்வு ஒன்றினை மேற்கொண்டு பதிவிடப்படாமையினால் அனைத்து வியாபார நிலையங்களும் ஆய்வு செய்யப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 2,652,648 ஆன போதும், அம் மீதியினுள் ஓராண்டையும் விஞ்சிய ரூபா 2,470,140 ஆன மீதி ஒன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 vii (ஊ) பிரிவு பிரகாரம் 2016 ஒக்டோபர் 25 திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி சபை அதிகார எல்லையில் காட்சிப்படுத்தப்படும் அனைத்து விளம்பர பலகைகளிலிருந்தும் கட்டணம் அறவிடப்பட்டு சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதும், 11 விளம்பர பலகைகளுக்காக ரூபா 54,750 ஆன கட்டணம் அறவிடப்படவில்லை.

(இ) அதிகார பிரதேசத்திற்கு சொந்தமான முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டு முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 832,897 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,000,000 ஆனது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபை அதிகார சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை முறையாக்குவதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு, பொது மக்கள் நலன், வசதிகள் மற்றும நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) அனுமதியற்ற நிர்மாணங்கள்**

2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் 37 அனுமதியற்ற நிர்மாணங்கள் அறியப்பட்டிருந்ததுடன், அந் நிர்மாணங்களில் 15 இற்காக அனுமதியற்ற கட்டளை அனுப்பப்பட்டிருந்த போதும் பின் விபரிப்பிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கைவிடப்பட்ட வேலைகள்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளினுள் 3 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 1,200,000 ஆன ஒதுக்கீடு பெறப்பட்டிருந்த போதும், கருத்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன. விபரங்கள் பின்வருமாறு

| | வேலை | மதிப்பீட்டுக் கிரயம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| | ------------- | ------------------ | --------------------- |
| | | ரூபா | |
| (i) | நுவரதென்ன முதலாம் கால்வாயிலிருந்து முன்னோக்கி பாதையின் மீதிப் பகுதியினை கொன்கிரீட் இடல் | 500,000 | புது மதிப்பீடொன்றிற்கு அனுப்பப்பட்டிருந்தது. |
| (ii) | பலஹெல யஹலதென்ன விகாரை நகர சபைக்கு ஒப்படைத்துள்ள காணியில் சனசமூக மண்டபமொன்று நிர்மாணித்தல். | 500,000 | காணி ஒப்படைக்கப்படாமை காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | புகையிரத நிலைய முன் பகுதி பொதுக் கால்வாய் தயாரித்தல். | 200,000 | காரணம் குறிப்பிடப்படவில்லை. |

**(இ) கழிவு பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகார எல்லையினுள் தினந்தோறும் ஒன்று சேறும் டொன் 1 1/2 இற்கும் 2 இற்கும் இடைப்பட்ட அளவான உக்கலடையும் கழிவுகள் குண்டசாலை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. கழிவுகள் பிரிக்கப்பட்டு வெவ்வேறாக எடுக்கப்படாததன் காரணமாக தினந்தோறும் கழிவுகளை பிரிப்பதற்கு பெறுமளவு கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உக்கலடையாத கழிவுகள் சபைக்கு சொந்தமான காணி ஒன்றில் வீசப்பட்டிருந்ததுடன், துன்ஓய குபுர காணியில் குப்பைகள் இடப்படும் பிரதேசம் பூராவும் அதிக துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.

**(ஈ) நிலையான அபிவிருத்தி**

சபை நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இலக்குகளை அறிந்து அதனை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவீடு ஒன்றினை இனங்கண்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 2017 ஆண்டுல் திட்டமிடலொன்றில்லாமல் 5 வேலைகளிற்காக ரூபா 1,817,123 ஆன ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டு அப்பெறுமதிக்கு கணக்குகளில் கடன்படுனர் ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இவ்வேலைகள் எதனையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காது மீண்டும் கடன்படுனர்களிடமிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ)** வத்தேகம நகர மண்டபவத்தில் நடாத்திச் செல்லப்படும் ஆயுர்வேத மத்திய நிலையத்தில் மருந்து விநியோகம் செய்யப்பட்ட போதும், 2017 ஜுன் 01 திகதியின் பின்னர் விநியோகம் செய்யப்பட்ட மருந்துகள் மருந்து இருப்புப் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ)** 2017 ஆண்டினுள் பொருத்தப்பட்டிருந்த நீர் மாணிக்காக ரூபா 93,226 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மணிதவள முகாமை

### (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணியிற்கிடையில் 4 பதவிகளில் 8 வெற்றிடங்களும் 1 பதவியில் 3 மிகையும் நிலவன.

### (ஆ) ஊழியர் கடன்

ஊழியர் கடன் மீதியினுள் ஏனைய திணைக்களங்களுக்கு இடம் மாறிச்சென்ற மூவரின் தவணையாக அல்லது அறவிடப்படாத ரூபா 412,900 ஆன மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், இக்கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமை

### 3.4.1 சொத்துக்களிலிருந்து பெறப்பட வேண்டிய வருமானம் பெறப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுச் சந்தை கடையறைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், மூடப்பட்டிருந்த கதவுகள் உடைந்து சேதமாகியிருந்தன.

(ஆ) சபைக்கு சொந்தமான ரூபா 17,649,179 பெறுமதியான பெகோ இயந்திரத்தினால் வருமானம் ஈட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை.

வத்தேகம் நகர சபைக்கு சொந்தமான 2 காணிகளில் 5 ஏக்கர் 47.20 பர்சஸ் அளவு 45 நபர்களுக்கு அனுமதியின்றி அனுபவித்தலிற்கு இடமளித்திருந்தன.

### 3.4.3 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான டெக்டர் ஒன்று, துவிச்சக்கர வண்டியொன்று, இரண்டு கைடெக்டர், பெகோ இயந்திரமொன்று மற்றும் கார் வண்டியொன்று பயனற்றதாக அலுவலக வளவில் போடப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் நடாத்திச்செல்லப்பட்ட கதிரை உற்பத்தி கருத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட ரூபா 333,700 பெறுமதியான தளபாட இயந்திரம் மற்றும் ரூபா 129,500 பெறுமதியான மின் உற்பத்தி இயந்திரம் பயன்படுத்தப்படாமல் பயனற்றதாக நிவலின.

### 3.4.4 வருடாந்த பொருட் கணிப்பீடு

2016 மெய்மை ஆய்வு அறிக்கையினால் ஏழவிற்பனைக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த 2 வாகனங்கள் 2017 ஒக்தோபர் 31 திகதி வரையும் ஏழவிற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் ரூபா 16,065,552 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்ட போதும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 ஒப்பந்த நிருவாகம்

**கொரஹிட்டியாவ பொது கால்வாய் கட்டுதல்**

2017 ஆண்டில் சபை நிதியத்தினை பயன்படுத்தி ரூபா 196,659 செலவில் பூர்த்தி செய்யப்பட்ட கொரஹிட்டியாவ பொது கால்வாய் 2018 ஏப்ரில் 03 ஆம் திகதி பௌதீக பரிசோதனையின் போது ஓர் பயன்பாட்டாளரின் வீட்டு முன் பக்க மதில் மற்றும் கால்வாயினை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையு

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமான மற்றும் செலவு விடயங்களுக்கு இடையில் ஒதுக்கீடு மாற்றப்பட்டதன் பின்னர் பாதீட்டிற்கும் உள்ளவாறான வருமான மற்றும் செலவிற்கும் இடையில் குறிப்பிடக்கூடிய முரன் ஒன்று அவதானிக்கப்பட்டததனால் பாதீடு பயனுள்ள முகாமை கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்தப்படாததுடன், இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்ட்டன.

(அ) 6 வருமான விடயங்களிற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 315,000 ஆன வருமானத்தில் எவ்வித வருமானமும் ஈட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்ட்டிருக்கவில்லை.

(ஆ) 9 செலவு விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 202,000 ஆன தேறிய ஒதுக்கீடும் மீதியாக இருந்தன.

(இ) 9 செலவு விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய ஒதுக்கீடின் 28 சதவீத முதல் 96 சதவீத வரை மீதி இருந்தன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்காக அலுவலகலொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவான உள்ளகக் கணக்காய்வு ஒன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் உள்ளூராச்சி ஆணையாளரின் இலக்கம் சீபீசி/சீவல்ஜீ/1/9/1/4 கொண்ட கடிதம் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமிக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டினுள் கணக்காய்வுக் குழு ஒன்றுக்கூடல் 02 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் வெளித்தரப்பினருக்கு அனுபவிக்க இடமளித்தமை. |
| | | (ii) | பயனற்ற சொத்துக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (iii) | சில நிலையான சொத்துக்கள் பயனுள்ள வேலைக்கு பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) | கணக்கீடு | (i) | நிலையான வைப்பகளில் வட்டி சரியாக கணக்கிடப்படாமை. |
| | | (ii) | கடன்கொடுனர் மற்றும் கடன்படுனர் குறைத்து கணக்கிடப்பட்டமை. |
| | | (iii) | இனகஞ்செய்யப்படாத கணக்கு மீதிகள் நிலவியமை. |
| (இ) | வாகன கட்டுப்பாடு | (i) | சாரதி பதவி வகிக்காத நபர்களுக்கு வாகனங்கள் பொறுப்பு கொடுத்துள்ளமை. |
| | | (ii) | சில வாகனங்கள் குறை பயன்பாட்டுடன் நிவலியமை. |
| | | (iii) | ஓராண்டிற்கு ஒரு முறை வாகனங்களில் எரிபொருள் பாவனை பரீட்சிக்கப்படாமை. |
| (ஈ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | | (ii) | ஆங்கீகாரமின்றி நிலுவை வருமானம் பதிவழித்தல். |
| (உ) | கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர். | (i) | 5 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்படாமை. |